

# இறந்தோருக்கான
# அடக்கச் சடங்கு
# திருப்பலி

1. உங்கள் வசதியை முன்னிட்டு, இறந்தோருக்கானத் திருப்பலியும், அதற்குரிய வாசகங்கள், பல்லவிகள், மன்றாட்டுகளும் முழுமையாக இங்கு தரப்பட்டுள்ளது. ஆயினும், இவற்றிலுள்ள எல்லாப் பாடங்களுக்கும், சிறப்பாக மன்றாட்டுகளுக்கும் பதிலாக வேறு பாடங்களை பங்கேற்போரின் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு சில மாற்றங்களோடு நீங்கள் பயன்படுத்தலாம்.
2. அடக்கம் அல்லது ஆண்டு நிறைவுக்கு ஏற்ற மன்றாட்டுகளை வெவ்வேறு சூழ்நிலைகளில் பயன்படுத்தினால், பொருத்தமற்ற சொற்களை அகற்றிவிடுக.
3. பாஸ்கா காலத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலிகளில் பல்லவிகளின் இறுதியில் உள்ள 'அல்லேலூயா'வை தேவைக்கு ஏற்ப விட்டுவிடலாம்.
4. ஒரு கிறிஸ்தவரின் மரணம், இறப்பிலிருந்து உயிர்ப்புக்குக் கடந்து செல்லும் பாஸ்காப் பயணமாகும். இந்தப் பாஸ்காப் பண்பை நன்கு உணர்த்தும் முறையில், திருநூல் வாசகங்களையும் திருப்பாடல்களையும் கொண்டு இறந்தோர்க்கு இறையருளையும் வாழ்வோருக்கு ஆறுதலையும் நாம் பெற்றுத் தருவோம்.

## அடக்கச் சடங்கு – இறந்தவர் இல்லத்தில்

குரு : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.

எல் : ஆமென்.

குரு : நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தை இரக்கம் நிறைந்த கடவுள். அவரே ஆறுதல் அனைத்திற்கும் ஊற்று, அவரைப் போற்றுவோம்.

(இறந்தவரின் உடல் மீது தீர்த்தம் தெளித்தபின், 130ம் திருப்பாடல்)

குரு : ஆண்டவரே உம்மை நோக்கி நான் மன்றாடுகிறேன்.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி நான் மன்றாடுகிறேன்.

வாச : ஆண்டவரே, ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் நான் உம்மை நோக்கி மன்றாடுகிறேன். ஆண்டவரே, என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும். என் விண்ணப்பக் குரலை உம்முடைய செவிகள் கவனத்துடன் கேட்கட்டும்.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி நான் மன்றாடுகிறேன்.

வாச : ஆண்டவரே, நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால், யார்தான் நிலைத்து நிற்க முடியும்? நீரோ மன்னிப்பு அளிப்பவர், மனிதரும் உமக்கு அஞ்சி நடப்பவர்.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி நான் மன்றாடுகிறேன்.

வாச : ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கிறேன், என் நெஞ்சம் காத்திருக்கின்றது, அவரது சொற்களுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றேன்.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி நான் மன்றாடுகிறேன்.

வாச : விடியலுக்காய் காத்திருக்கும் காவலரை விட, ஆம்,விடியலுக்காய் காத்திருக்கும் காவலரை விட, என் நெஞ்சம் என் தலைவருக்காய் ஆவலுடன் காத்திருக்கின்றது.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி நான் மன்றாடுகிறேன்.

வாச : இஸ்ரயேலே, ஆண்டவரையே நம்பியிரு. பேரன்பு ஆண்டவரிடமே உள்ளது. மிகுதியான மீட்பு அவரிடமே உண்டு. எல்லாத் தீவினைகளினின்றும் இஸ்ரயேலை மீட்பவர் அவரே.

எல் : ஆண்டவரே உம்மை நோக்கி நான் மன்றாடுகிறேன்.

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

குரு : மன்றாடுவோமாக.

ஆண்டவரே, உமது இரக்கத்தை கெஞ்சி மன்றாடும் எங்களுக்குச் செவி சாய்த்தருளும். உமது கட்டளைப்படி இவ்வுலகை விட்டகன்ற உம் அடியார் (**இறந்தவரின் பெயர்**) அவர்களின் ஆன்மாவை அமைதியும் ஒளியும் நிறைந்த இடத்தில் வரவேற்று, உம் புனிதர்களுடையத் தோழமையில் சேர்த்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

குரு : மன்றாடுவோமாக.

இரக்கம் மிகுந்த தந்தையே, ஆறுதல் அளிக்கும் இறைவா, நீர் எம் மீது முடிவில்லா அன்பு கூர்ந்து, சாவின் நிழலையே வாழ்வின் வைகறையாக மாற்றுகின்றீர். இன்னலில் உழன்று ஏங்கும் உம் அடியாரைக் கண்ணோக்க உம்மை மன்றாடுகிறோம். (ஆண்டவரே எங்கள் அடைக்கலமும் ஆற்றலும் நீரே, இருளும் துயரும் நிறைந்த எங்கள் அழுகையை மாற்றி, நாங்கள் ஒளியும் அமைதியும் பெறும் வண்ணம் எங்களோடு இருந்தருள்வீராக.)

எங்கள் ஆண்டவராகிய உம் திருமகன், எங்கள் மரணத்தைத் தம் மரணத்தால் அழித்து, தம் உயிர்ப்பினால் மீண்டும் எங்களுக்கு வாழ்வு அளித்தார். ஆதலால் எங்கள் கண்ணீர் எல்லாம் துடைக்கப் பெற்று, நாங்கள் இவ்வுலக வாழ்வின் இறுதியில் எங்கள் உறவினர்களோடு விண்ணகம் வந்து சேர்வதற்கு ஏற்றவாறு கிறிஸ்து இயேசுவை நோக்கிச் சென்று கொண்டிருக்கச் செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

**********

## அடக்கச் சடங்கு – ஆலயத்துக்குப் பவனி

இறந்தவரின் உடலை அவரது இல்லத்திலிருந்து ஆலயத்திற்கு எடுத்துச் செல்லும் போது கீழுள்ளப் பாடலையோ அல்லது வேறு தகுந்தப் பாடல்களையோ பயன்படுத்தலாம்.

**பல்லவி:**

இறைவா உமது அடியார் இவருக்கு இரங்கி அமைதி அளித்தருளும்.
மண்ணகக் கோயிலில் ஏற்பது போல விண்ணகக் கோயிலில் இடம் அருள்வீர்.

**சரணங்கள்:**

திருநீராடிப் புனிதம் அடைந்து, திருவருட்சாதனம் பலவும் பெற்று
அழியா வாழ்வைப் பெற்ற தளத்தில், அழியும் உடலைச் சுமந்து வந்தோம்!

நித்திய வாழ்வின் உணவை உண்டு, நித்தம் உமது வார்த்தையைக் கேட்டு
இனிவரும் வாழ்வில் நம்பிக்கை தந்த இல்லத்தில் இவரைக் கொண்டு வந்தோம்.

பாவப் பொறுத்தல் பலமுறை தந்து, பரமன் அன்பை இவருக்கு அருளிய
தலமாம் கோயில் நோக்கியே வந்தோம், தயவாய் இவர் பிழை பொறுத்தருள்வீர்.

கிறிஸ்துவின் மறையுடல் அங்கம் இவரை, திருச்சபை மக்கள் பரிவுடன் கொணர்ந்தோம்
என்றும் அழியா கிறிஸ்து உடல் போல் இன்றும் இவர் மகிமை பெறவே !

வானவர் கூடி வரவேற்றிவரை ஆபிரகாமின் மடியில் வளர்த்தி,
ஏழை லாசர் அடைந்த பேற்றை, எம்மவர் இவரும் அடைந்திடவே !

எரியும் தீபம் கரத்தில் ஏந்தி, ஏனத்தில் எண்ணெய் நிறையத் தங்கி
நினையா நேரம் வந்திடும் தலைவரை அணையா விளக்குடன் சந்திக்கச் செல்வோம் !

இறந்தவரின் உடல் ஆலயத்தை அடைந்ததும், அதை பலிப்பீடத்துக்கு முன்னால் வைக்க வேண்டும். இறந்தவர் கிறிஸ்தவ விசுவாசியாக இருந்தால் இறந்தவரின் தலைப் பகுதி ஆலயத்தின் தலைவாசலை நோக்கி இருக்க வேண்டும். இறந்தவர் ஆயராகவோ, திருநிலைப்படுத்தப்பட்டவராகவோ, திருத்தொண்டராகவோ இருந்தால் அவருடையத் தலைப் பகுதி பலிப்பீடத்தை நோக்கி இருக்க வேண்டும்.

அதன் பின் திருப்பலி வழக்கம் போல் நடைபெறும்.

# ஆலயத்தில் திருப்பலி

இந்தத் திருப்பலியில் பங்கேற்பவர்கள் ஏற்கெனவே வேறொரு திருப்பலியில் பங்கேற்று நன்மை வாங்கிருப்பினும், மறுமுறையும் இந்தத் திருப்பலியில் நன்மை உட்கொள்ளலாம்.

திருப்பலியின் தொடக்கத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள வருகைப்பல்லவிகளுள் ஒன்றை நீங்கள் பயன்படுத்தலாம் அல்லது தகுந்த ஒரு வருகைப்பாடலைப் பாடலாம்.

### வருகைப் பல்லவி 1

நிலையான இளைப்பாறுதலை அவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே. முடிவில்லாத ஒளி இவரின் மேல் ஒளிர்வதாக.

### வருகைப் பல்லவி 2

ஆண்டவர் விண்ணகத்தின் கதவை இவருக்குத் திறந்து விடுவாராக. இவர் தம் தாய் நாட்டுக்கே திரும்பிச் செல்வாராக. அங்கே சாவு இல்லை, முடிவில்லாத மகிழ்ச்சி என்றென்றும் நிலைகொண்டிருக்கும்.

### வருகைப் பல்லவி 3

ஆண்டவர் கூறுகிறார்: 'என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள். உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

குரு : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...
எல் : ஆமென்.

குரு : நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.
எல் : உம் ஆன்மாவோடும் இருப்பதாக.

### பாவத்துயர் செயல்

குரு : சகோதர சகோதரிகளே, தூய மறைநிகழ்வுகளைக் கொண்டாட நாம் தகுதி பெறும் பொருட்டு நம் பாவங்களை ஏற்று மனம் வருந்துவோம்.

குரு : எல்லாம் வல்ல இறைவனிடமும்...
எல் : சகோதர சகோதரிகளே, உங்களிடமும் நான் பாவி என ஏற்றுக்கொள்கின்றேன். ஏனெனில் என் சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும், கடமையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன்.

(மார்பில் தட்டிக்கொண்டு) என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே. ஆகையால், எப்போதும் கன்னியான புனித மரியாவையும் வானதூதர், புனிதர்

அனைவரையும், சகோதர சகோதரிகளே உங்களையும், நம் இறைவனாகிய ஆண்டவரிடம் எனக்காக வேண்டிக்கொள்ள மன்றாடுகின்றேன்.

குரு : எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம் வைத்து, நம் பாவங்களை மன்னித்து, நம்மை நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.

எல் : ஆமென்.

## மன்னிப்பு மன்றாட்டு

குரு : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

குரு : கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.

எல் : கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.

குரு : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

(கீழுள்ளத் திருக்குழும மன்றாட்டுகளில் ஒன்றைப் பயன்படுத்தலாம்)

## திருக்குழும மன்றாட்டு 1

குரு : மன்றாடுவோமாக.

இறைவா, எல்லாம் வல்ல தந்தையே, உம் திருமகன் இறந்து உயிர்த்தெழுந்தார் என நாங்கள் நம்பி அறிக்கையிடுகின்றோம் அதனால் அவரில் துயில் கொண்ட உம் அடியார் (**இறந்தவரின் பெயர்**) அவர்கள் இம்மறைநிகழ்வு வழியாக அவரோடு உயிர்த்தெழும் பேரின்பம் அடைய இரக்கத்துடன் அருள்வீராக. உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

## திருக்குழும மன்றாட்டு 2

குரு : மன்றாடுவோமாக.

இறைவா, எப்பொழுதும் இரக்கம் காட்டுவதும், மன்னிப்பு அளிப்பதும் உமக்கு இயல்பாகும் (இன்று) நீர் உம்மிடம் அழைத்துக் கொண்ட உம் அடியார் (**இறந்தவரின் பெயர்**) அவர்களுக்காக உம்மை வேண்டுகின்றோம். அதனால் இவர் உம்மை எதிர்நோக்கி நம்பிக்கையோடு வாழ்ந்ததால் இவரைத் தம்முடைய உண்மையான தாயகத்துக்கு அழைத்துச் சென்று என்றென்றும் உள்ள மகிழ்ச்சியைத் துய்த்திடச் செய்தருள்வீராக. உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

## திருக்குழும மன்றாட்டு 3

குரு : மன்றாடுவோமாக.

இறைவா, நம்பிக்கையாளரின் மாட்சியும் நேர்மையாளரின் வாழ்வுமானவரே, உம் திருமகனின் இறப்பினாலும் உயிர்ப்பினாலும் நாங்கள் மீட்கப் பெற்றுள்ளோம். எமது உயிர்ப்பின் மறைபொருளை அறிந்து கொண்ட உம் அடியார் (**இறந்தவரின் பெயர்**) அவர்கள், உமது இரக்கத்தால் நிலையான பேற்றின் மகிழ்ச்சியைச் சுவைக்கத் தகுதி பெறுவாராக. உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

(இதன் பின் இறைவார்த்தை வழிபாடு தொடரும். இப்புத்தகத்தின் பின்னால் இணைக்கப்பட்டுள்ள ஒரு தொகுப்பில் ஒன்றைப் பயன்படுத்தலாம். இறைவார்த்தை வழிபாடு முடிந்ததும் அருள்பணியாளர் மறையுரையாற்றுவார்.)

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

குரு : உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான். உயிர் வாழ்க்கையில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான் என்று உரைத்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் நம் சகோதரருக்காக (சகோதரிக்காக) இப்போது மன்றாடுவோம்.

முத : இறந்து போன லாசருக்காக கண்ணீர் சிந்தினீரே, எங்கள் கண்ணீரையும் துடைக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : மனம் திரும்பிய கள்ளனுக்கு நீர் வானகம் தருவதாய் உறுதியளித்தீரே, எங்கள் சகோதரரையும் (சகோதரியையும்) உமது வான் வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : எங்கள் சகோதரரை (சகோதரியை) திருமுழுக்கு நீரினால் கழுவி, திருப்பூசுதலால் முத்திரையிட்டீரே, இவரை விண்ணகம் சேர்த்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : எங்கள் சகோதரருக்கு (சகோதரிக்கு) உம் உடலையும் இரத்தத்தையும் திரு விருந்தாக அளித்தீரே, உமது விண்ணக விருந்திலும் இவரை அமரச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : எங்கள் சகோதரரின் (சகோதரியின்) பிரிவினால் துயருறும் நாங்கள் உம் மீது உள்ள விசுவாசத்திலும், நிலைவாழ்வின் நம்பிக்கையினாலும் ஆறுதல் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

(நமது தனிப்பட்டக் கருத்துகளுக்காகச் சிறிது நேரத் மௌனமாக மன்றாடுவோம்)

குரு : ஆண்டவரே, உமது திருவுளப்படி வாழ்ந்து இறந்த உம் அடியார் தம் தீயச் செயல்களுக்குத் தண்டனை பெறாதபடி இரக்கம் காட்டியருளும். இவரது மெய்யான விசுவாசம் இவ்வுலகில் இவருக்கு விசுவாசிகளின் கூட்டத்தில் இடம் அளித்தது போல், உமது இரக்கம் இவரை மறுவுலகில் வானதூதரின் கூட்டத்திலும் சேர்க்க வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

# நற்கருணை வழிபாடு

(அருள்பணியாளர் காணிக்கைகளை ஒப்புக்கொடுக்கும் வேளையில் தகுந்த காணிக்கைப் பாடல் ஒன்றைப் பாடலாம்.)

## காணிக்கை அர்ப்பணிப்பு

குரு : ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்துப் பெறுவீராக. ஏனெனில் உமது வள்ளன்மையிலிருந்து நாங்கள் இந்த அப்பத்தைப் பெற்றுள்ளோம். நிலத்தின் விளைவும் மனித உழைப்பின் பயனுமான இந்த அப்பத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். இது எங்களுக்கு வாழ்வு அளிக்கும் அப்பமாக மாறும்.

எல் : இறைவன் என்றென்றும் வாழ்த்துப்பெறுவாராக.

குரு : ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்துப் பெறுவீராக. ஏனெனில் உமது வள்ளன்மையிலிருந்து நாங்கள் இந்த இரசத்தைப் பெற்றுள்ளோம். திராட்சைச் செடியும் மனித உழைப்பின் பயனுமான இந்த இரசத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். இது எங்கள் ஆன்மீகப் பானமாக மாறும்.

எல் : இறைவன் என்றென்றும் வாழ்த்துப்பெறுவாராக.

குரு : சகோதர சகோதரிகளே, என்னுடையதும் உங்களுடையது மான இப்பலி எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனுக்கு ஏற்றதாகும்படி மன்றாடுங்கள்.

எல் : ஆண்டவர் தமது பெயரின் புகழ்ச்சிக்காகவும் மாட்சிக்காகவும் நமது நன்மைக்காகவும் புனிதத் திரு அவை அனைத்தின் நலனுக்காகவும் உமது கையிலிருந்து இப்பலியை ஏற்றுக்கொள்வாராக.

## காணிக்கை மீது மன்றாட்டு

குரு : ஆண்டவரே, உம் அடியார் (**இறந்தவரின் பெயர்**) அவர்களின் மீட்புக்காக உம்மைக் கனிவுடன் கெஞ்சி மன்றாடி இக்காணிக்கைகளை உமக்குப் பணிந்து அளிக்கின்றோம். இவர் உம்முடையத் திருமகனைத் தம் அன்பான மீட்பராகத் தயக்கம் இன்றி ஏற்றுக் கொண்டதால் அவரையே தம் இரக்கமுள்ள நடுவராக எதிர்கொள்ளச் செய்வீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

## நற்கருணை மன்றாட்டு

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

குரு : இதயங்களை மேலே எழுப்புங்கள்.

எல் : ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்.

குரு : நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.

எல் : அது தகுதியும் நீதியும் ஆனதே.

குரு : ஆண்டவரே, தூயவரான தந்தையே, என்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, எந்நாளும் எவ்விடத்திலும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துவது மெய்யாகவே தகுதியும் நீதியும் ஆகும். எங்கள் கடமையும் மீட்புக்கு உரிய செயலும் ஆகும்.

கிறிஸ்துவில் தான் மேன்மையான உயிர்ப்பின் எதிர்நோக்கு எங்களுக்கு ஒளிர்கின்றது. சாவது திண்ணம் எனும் நியதி எங்களை வருத்தத்தில் ஆழ்த்தினாலும், வரவிருக்கும் அழிவில்லா வாழ்வு இனி உண்டு எனும் வாக்குறுதி எங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றது. ஏனெனில் ஆண்டவரே, உம் நம்பிக்கையாளருக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை. இந்த மண்ணக வாழ்வின் உறைவிடம் அழிந்ததும் விண்ணகத்தில் நிலையான வீடு ஆயத்தமாய் இருக்கின்றது.

ஆகவே வானதூதர், முதன்மை வானதூதரோடும், அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோரோடும், வான்படைகளின் அணிகள் அனைத்தோடும் சேர்ந்து நாங்கள் உமது மாட்சியைப் புகழ்ந்து பாடி முடிவின்றிச் சொல்வதாவது:

## தூயவர் கீதம்

தூயவர், தூயவர், தூயவர்! வான்படைகளின் கடவுளாம் ஆண்டவர்.
விண்ணகமும் மண்ணகமும் உமது மாட்சியால் நிறைந்துள்ளன.
உன்னதங்களிலே ஓசன்னா!
ஆண்டவர் பெயரால் வருகிறவர் ஆசி பெற்றவர்.
உன்னதங்களிலே ஓசன்னா!

## நற்கருணை மன்றாட்டு 2

குரு : ஆண்டவரே, நீர் மெய்யாகவே தூயவர், தூய்மை அனைத்துக்கும் ஊற்று. ஆகவே உம்முடைய ஆவியைப் பொழிந்து, இக்காணிக்கைகளைத் தூய்மைப் படுத்த உம்மை வேண்டுகின்றோம். இவ்வாறு, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் (✠) உடலும் இரத்தமுமாக எங்களுக்கு இவை மாறுவனவாக.

அவர் பாடுபட உளம் கனிந்து தம்மைக் கையளித்த போது
அவர் அப்பத்தை எடுத்து, நன்றி செலுத்தி, அதைப் பிட்டு,
தம் சீடர்களுக்கு அளித்துக் கூறியதாவது:

அனைவரும் இதிலிருந்து பெற்று உண்ணுங்கள்.
ஏனெனில் இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் உடல்.

குரு : அவ்வண்ணமே, இரவு விருந்தை அருந்தியபின்,
அவர் திருக்கிண்ணத்தை எடுத்து, மீண்டும் உமக்கு நன்றி கூறி,
தம் சீடர்களுக்கு அளித்து அவர் கூறியதாவது:

அனைவரும் இதிலிருந்து பெற்றுப் பருகுங்கள்.
ஏனெனில் இது புதிய, நிலையான,
உடன்படிக்கைக்கு உரிய என் இரத்தத்தின் கிண்ணம். இது
பாவ மன்னிப்புக்கென்று உங்களுக்காகவும் பலருக்காகவும் சிந்தப்படும்.
இதை என் நினைவாகச் செய்யுங்கள்.

குரு : நம்பிக்கையின் மறைபொருள்.
எல் : ஆண்டவரே, நீர் வருமளவும் உமது இறப்பினை
அறிக்கையிடுகின்றோம். உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம்.

குரு : ஆகவே ஆண்டவரே, நாங்கள் கிறிஸ்துவின் இறப்பினையும் உயிர்ப்பினையும் நினைவு கூர்ந்து, வாழ்வு தரும் அப்பத்தையும் மீட்பு அளிக்கும் கிண்ணத்தையும் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். உம் திருமுன் நின்று உமக்கு ஊழியம் புரியத் தகுந்தவர்கள் என எங்களை ஏற்றுக் கொண்டீர். எனவே உமக்கு நன்றி செலுத்துகின்றோம். மேலும் கிறிஸ்துவின் உடலிலும் இரத்தத்திலும் பங்கு கொள்ளும் எங்களைத் தூய ஆவியார் ஒன்று சேர்க்க வேண்டும் என உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகின்றோம்.

ஆண்டவரே, உலகெங்கும் பரவி இருக்கும் உமது திரு அவையை நினைவு கூர்ந்தருளும். எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், எங்கள் பேராயர் வில்லியம் கோ, எல்லாத் திருநிலையினர் ஆகிய அனைவரோடும் உமது திரு அவை அன்பில் நிறைவு பெறச் செய்தருளும்.

நீர் (இன்று) இவ்வுலகிலிருந்து உம்மிடம் அழைத்துக்கொண்ட (**இறந்தவரின் பெயர்**) என்னும் உம் அடியாரை நினைவு கூர்ந்தருளும். உம் திருமகனோடு அவரது இறப்பில் இணைக்கப்பட்டிருந்த இவர் உயிர்ப்பிலும் அவரைப் போல இருக்கச் செய்தருளும்.

மேலும் உயிர்த்தெழும் எதிர்நோக்குடன் துயில்கொள்ளும் எங்கள் சகோதரர் சகோதரிகளையும் இறந்தோர் அனைவரையும் இரக்கத்துடன் நினைவு கூர்ந்து, உமது திருமுக ஒளியினுள் ஏற்றருளும். எங்கள் அனைவர் மீதும் இரக்கமாயிரும். கடவுளின் கன்னித் தாயான புனித மரியா, அவருடைய கணவரான புனித யோசேப்பு, புனிதத் திருத்தூதர்கள், இவ்வுலகில் உமக்கு உகந்தவராய் இருந்தோர் ஆகிய புனிதர் அனைவருடனும் நாங்கள் நிலைவாழ்வில் பங்குகொள்ளும் தகுதி பெற்று, உம் திருமகன் இயேசு கிறிஸ்து வழியாக உம்மைப் புகழ்ந்தேத்தும் வரம் அருள உம்மை மன்றாடுகின்றோம்.

குரு : இவர் வழியாக, இவரோடு, இவரில்,
எல்லாம் வல்ல இறைவனாகிய தந்தையே,
தூய ஆவியாரின் ஒன்றிப்பில், எல்லாப் புகழும் மாட்சியும்,
என்றென்றும் உமக்கு உரியதே.

எல் : ஆமென்.

குரு : மீட்பரின் கட்டளையால் கற்பிக்கப்பட்டு, இறைப்படிப்பினையால் பயிற்சி பெற்ற நாம் துணிந்து சொல்வோம்:

எல் : விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே,
உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக!
உமது ஆட்சி வருக!
உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல,
மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்.
எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல,
எங்கள் குற்றங்களை மன்னியும்.
எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்.
தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும்.

குரு : ஆண்டவரே, தீமை அனைத்திலிருந்தும் எங்களை விடுவித்து, எங்கள் வாழ்நாளில் அமைதியைக் கனிவுடன் அருள உம்மை மன்றாடுகின்றோம். உமது இரக்கத்தின் உதவியால் நாங்கள் பாவத்திலிருந்து எப்போதும் விடுதலை பெற்று, யாதொரு கலக்கமும் இன்றி நலமாய் இருப்போமாக. நாங்கள் எதிர்நோக்கி இருக்கும் பேரின்பத்துக்காகவும் எம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.

எல் : ஏனெனில் ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

குரு : ஆண்டவரே இயேசு கிறிஸ்துவே, ‘அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன். என் அமைதியையே உங்களுக்கு அளிக்கின்றேன்’ என்று உம் திருத்தூதர்களுக்கு மொழிந்தீரே. எங்கள் பாவங்களைப் பாராமல், உமது திரு அவையின் நம்பிக்கையைக் கண்ணோக்கி, உமது திருவுளத்துக்கு ஏற்ப அதற்கு அமைதியையும் ஒற்றுமையையும் அளித்தருள்வீராக.

எல் : ஆமென்.

குரு : ஆண்டவருடைய அமைதி உங்களோடு என்றும் இருப்பதாக.

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பதாக.

குரு : ஒருவருக்கொருவர் அமைதியைப் பகிர்ந்துகொள்வோம்.

## மன்னிப்பு மன்றாட்டு

உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியே, எம் மேல் இரக்கம் வையும்.
உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியே, எம் மேல் இரக்கம் வையும்.
உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியே, எமக்கு அமைதி அருளும்.

குரு : ஆண்டவரே இயேசு கிறிஸ்துவே, நான் உட்கொள்ளும் உம் திரு உடலும் திரு இரத்தமும் என்னை நீதித் தீர்ப்புக்கும் தண்டனைக்கும் உள்ளாக்காமல், உமது பரிவிரக்கத்தால் என் மனதுக்கும் உடலுக்கும் பாதுகாப்பாகவும் நலம் அளிக்கும் அருமருந்தாகவும் இருப்பனவாக.

குரு : இதோ, இறைவனின் செம்மறி,
இதோ, உலகின் பாவங்களைப் போக்குபவர்.
செம்மறியின் விருந்துக்கு அழைக்கப்பெற்றோர் பேறுபெற்றோர்.

எல் : ஆண்டவரே, நீர் என் இல்லத்தில் எழுந்தருள நான் தகுதியற்றவன்.
ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும்,
எனது ஆன்மா நலம் அடையும்.

குரு : கிறிஸ்துவின் திரு உடலும் திரு இரத்தமும் என்னைக் காத்து நிலைவாழ்வு அளிப்பதாக.

எல் : ஆமென்.

## திருவிருந்துக்குப்பின் மன்றாட்டு 1

குரு : மன்றாடுவோமாக.

ஆண்டவரே இறைவா, உம்முடைய திருமகன் தமது திரு உடலின் அருள் அடையாளத்தில் எங்களுக்கு இறுதிப் பயண உணவை விட்டுச் சென்றார். அதன் பயனாக எங்கள் சகோதரர் (சகோதரி) (**இறந்தவரின் பெயர்**) கிறிஸ்து அளிக்கும் அதே விண்ணக விருந்துக்கு வந்து சேரக் கனிவுடன் அருள்புரிவீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

## திருவிருந்துக்குப்பின் மன்றாட்டு 2

குரு : மன்றாடுவோமாக.

எல்லாம் வல்ல இறைவா, (இன்று) இவ்வுலகை விட்டுப் பிரிந்த உம் அடியார் (**இறந்தவரின் பெயர்**) அவர்களைக் கனிவுடன் கண்ணோக்கியருள உம்மை வேண்டுகின்றோம். அதனால் இப்பலியின் பயனாக இவர் தம் பாவங்களிலிருந்து விடுபட்டு, தூய்மை அடைந்து, உயிர்ப்பின் என்றென்றுமுள்ள மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளச் செய்வீராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

## திருவிருந்துக்குப்பின் மன்றாட்டு 3

குரு : மன்றாடுவோமாக.

ஆண்டவரே, எங்களுக்கு அருள் புரிய உம்மை வேண்டுகின்றோம். அதனால் உம் அடியார் (**இறந்தவரின் பெயர்**) நாங்கள் கொண்டாடும் இந்தப் பாஸ்கா மறைநிகழ்வினால் ஒளியும் அமைதியும் நிறைந்த விண்ணக வீட்டுக்கு வந்து சேர்வாராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

(பீடத்தின் முன் இறந்தவரின் உடல் இருந்தால் நிறைவுச் சடங்கு தேவையில்லை)

## நிறைவுச் சடங்கு

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

குரு : எல்லாம் வல்ல இறைவன், தந்தை, மகன், தூய ஆவியார் உங்களுக்கு ஆசி வழங்குவாராக.

எல் : ஆமென்.

குரு : சென்று வாருங்கள், திருப்பலி நிறைவேறிற்று.

எல் : இறைவனுக்கு நன்றி.

## திருப்பலி முடிவில் பிரியாவிடைச் சடங்கு

திருப்பலியின் நன்றி மன்றாட்டு முடிந்ததும், தொடர்ந்து அருள்பணியாளரும் திருத்தொண்டரும் இறந்தவரின் உடல் அருகே சென்று மக்களை நோக்கி நிற்கின்றனர்.

குரு : விசுவாசிகளின் வழக்கப்படி, இறந்தோரை நல்லடக்கம் செய்யும் கடமையை நிறைவேற்றக் கூடியிருக்கும் நாம், இறைவனைப் பக்தியுடன் மன்றாடுவோம். அனைத்தும் அவருக்கென்றே, உயிர் வாழ்கின்றன. நம் சகோதரரின் (சகோதரியின்) உடலை நலவுற்ற நிலையில் நாம் அடக்கம் செய்வதாலும், புனிதரின் வரிசையில் இது வல்லமையுள்ளதாக உயிர்த்தெழச் செய்வாராக. இவரது ஆன்ம புனிதரின் கூட்டத்திலே இடம்பெறக் கட்டளையிடுவாராக. தீர்ப்பிடும்போது இறைவன் இவருக்கு இரக்கம் காட்டுவதால் சாவே இவருக்கு மீட்பளிப்பதாகி, பாவக்கடன் ஒழிவதாக. தந்தையிடம் இவர் அன்புறவு கொள்ள நல்லாயன் தாமே இவரை அழைத்துச் செல்வாராக. இவர் என்றென்றும் வாழும் அரசரின் பரிவாரத்தில் முடிவற்ற இன்பமும் புனிதரின் தோழமையும் பெற்று மகிழ்வாராக.

**பிரியாவிடை எதிர் பாடல் :**

இறைவனின் புனிதரே, துணை நிற்க வருவீர்,
தேவனின் தூதரே, எதிர் கொண்டு வருவீர்!

குரு : இவரது ஆன்மாவை ஏற்றுக் கொண்டு உன்னதர் திருமுன் ஒப்புக் கொடுங்கள்.

எல் : உம்மைத் தம்மிடம் அழைத்த கிறிஸ்து உம்மை ஏற்றுக் கொள்வாராக. தூதரும் உம்மை ஆபிரகாமின் மடியில் கொண்டு சேர்ப்பாராக!

குரு : இவரது ஆன்மாவை ஏற்றுக் கொண்டு உன்னதர் திருமுன் ஒப்புக் கொடுங்கள்.

எல் : நித்திய இளைப்பாற்றியை ஆண்டவரே, இவருக்கு இன்று அளித்தருளும். முடிவில்லா ஒளி இவர் மேல் ஒளிர்வதாக.

குரு : இவரது ஆன்மாவை ஏற்றுக் கொண்டு உன்னதர் திருமுன் ஒப்புக் கொடுங்கள்.

**பிரியாவிடைப் பாடல்:**

பல்லவி:

சென்று வா கிறிஸ்தவனே உலகை வென்றுவிட்டாய் நீ விசுவாசத்தால்!

சரணங்கள்:

உற்றார் உறவினர் நண்பரெல்லாம் சுற்றி நின்று வழியனுப்ப,
உற்ற துன்பத்தில் ஆறுதலாய், உதவும் திருச்சபை அருகிருக்க!

இறைவனின் புனிதரே துணை வருவீர்! தேவனின் தூதரே வந்தழைப்பீர்!
அடியார் ஆன்மா ஏற்றிடுவீர்! ஆண்டவர் திருமுன் சேர்த்திடுவீர்!

படைத்த தந்தை உனை ஏற்பார்! மீட்ட திருமகன் உனைக் காப்பார்!
அர்ச்சித்த ஆவியும் உனைச் சூழ்வார்! அனைத்து புனிதரும் உனைச் சேர்வார்!

(பாடல் முடிந்ததும் அருள்பணியாளர் தொடர்ந்து செபிப்பார்)

குரு : கிறிஸ்துவுக்குள் இறந்த அனைவரோடும் இவரும் இறுதி நாளில் உயிர்த்து எழுவார் என்னும் உறுதியான நம்பிக்கையுடன், இரக்கம் மிகுந்த தந்தையே, உம்முடைய கைகளில் எம் சகோதரரின் (சகோதரியின்) ஆன்மாவை ஒப்படைக்கிறோம். எனவே, ஆண்டவரே, எங்கள் மன்றாட்டுக்குத் தயவாய் செவி சாய்த்து, உம் அடியாருக்குப் பேரின்ப வீட்டின் கதவுகளைத் திறந்தருளும். மேலும், இங்கிருக்கும் நாங்கள் அனைவரும் கிறிஸ்துவை சந்தித்து, உம்மோடும் உம் சகோதரரோடும் (சகோதரியோடும்) எந்நாளும் ஒன்று சேர்ந்திருக்குமட்டும் விசுவாசம் நிறைந்தச் சொற்களால் ஒருவரையொருவர் தேற்றிக் கொள்ளச் செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

# கல்லறைத் தோட்டத்திற்குப் பவனி

பிரியாவிடைச் சடங்கு முடிந்ததும், இறந்தவரின் உடலைக் கல்லறைத் தோட்டத்திற்குத் தூக்கி செல்கையில் கீழுள்ளப் பாடலையோ வேறு தகுந்தப் பாடலையோ பாடலாம்.

பல்லவி:

இறைவா இவரது திருப்பயணம் இனிதே அமைந்திட இறைஞ்சுகிறோம்!

சரணங்கள்:

பாஸ்காப் பயணம் இதுவே தான், கிறிஸ்தவர் செல்லும் வழி இது தான்,
இறப்பைக் கடந்து உயிர்ப்பிற்கு, இசைந்து செல்லும் வழி இது தான்.
அடிமைத் தலையை அறுத்தெரிந்து, ஆண்டவன் மக்கள் அன்றொரு நாள்,
உரிமை நாடு கடந்து சென்றார், உண்மை இங்கு நடப்பது தான்!

சிலுவை சுமந்த வழியினிலே, சீர்மிகு உயிர்ப்பும் பிறந்ததுவே!
சிலுவை பதித்த சுவடுகளில் சீடர் இருவரும் செல்கின்றார்!

துன்பத்தின் வழியாய் திருச்சபையும், தூரப் பயணம் போவது போல்,
பயணத்தின் முடிவில் இவ்வடியார் பரகதி சேர்ந்திட இறைஞ்சிடுவோம்!

விண்ணக விருந்து உண்டிடவே, விரைந்து செல்லும் இவ்வடியார்,
திருமகன் வந்து பார்க்கையிலே, திருமண உடையுடன் திகழ்ந்திடவே!

ஆண்டவர் அழைத்த நேரத்திலே, அணையா விளக்குடன் ஆயத்தமாய்,
உடனே செல்லும் ஊழியராம், உண்மையில் பேறுபெற்றவரே!

அந்நிய நாட்டின் எல்லைதனை, அடியார் இவரும் கடந்துவிட்டார்.
தாயகம் திரும்பும் பயணியிவர், தவறாது தன்வீடு சேர்ந்திடவே!

எனக்கு வாழ்வு கிறிஸ்துவே தான்! என்றும் அவரோ டிருப்பதுதான்!
இழப்பு அனைத்தும் அவரின்றி இறப்பு ஆதலின் ஆதாயம்!

## கல்லறைத் தோட்டத்தில் சடங்கு

(இறந்தவரின் உடலைக் கல்லறைக் குழியின் அருகில் வைத்தப் பின்)

குரு : செபிப்போமாக. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் கல்லறையில் மூன்று நாள் துயில் கொண்டதால், உம்மீது விசுவாசம் கொண்ட அனைவரின் கல்லறைகளையும் அர்ச்சிக்கின்றீர். எனவே, உடல் அடக்கத்திற்குப் பயன்படும் இக்கல்லறைகள் உயிர்த்தெழும் நம்பிக்கையையும் வளர்க்கின்றன. நீர் உம் அடியாரை உயிர்ப்பித்து இவருக்குப் பேரொளி தரும் அந்த நாள் மட்டும் இவர் கல்றையில் அமைதியுடன் துயில் கொண்டு இளைப்பாறச் செய்தருள்வீராக. உயிர்ப்பும் உயிரும் நீரேயாதலால் இவர் உயிர்த்தெழுந்த பின் உம் திருமுக ஒளியில் விண்ணகத்தின் நித்திய ஒளியைக் காண்பாராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே. உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

(அருள்பணியாளர் கல்லறைக் குழியின் மீது தீர்த்தம் தெளித்துத் தூபம்காட்டுவார்)

குரு : நம் சகோதரரை (சகோதரியை) இவ்வுலக வாழ்வினின்றும் தம்மிடம் அழைத்துக் கொள்ள எல்லாம் வல்ல இறைவன் திருவுளம் கொண்டதால், இவர் உருவான மண்ணிற்கே திரும்பிச் செல்லும் படி இவர் உடலை நிலத்திற்கு கையளிக்கிறோம். ஆவியினும், இறந்தோரிடமிருந்து தலைப்பேறாக உயிர்த்தெழுந்த கிறிஸ்து, தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்றுவார். ஆதலால் நம் சகோதரரை (சகோதரியை) ஆண்டவரிடம் ஒப்படைப்போம். ஆண்டவர் இவரைத் தம் அமைதியினுள் ஏற்றுக்கொள்வாராக, இவரது உடலையும் இறுதி நாளில் மகிமையுடன் உயிர்த்தெழச் செய்வாராக.

**விசுவாசிகள் மன்றாட்டு:**

குரு : உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான். உயிர் வாழ்க்கையில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான் என்று உரைத்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் நம் சகோதரருக்காக (சகோதரிக்காக) நாம் மன்றாடுகிறோம்.

வாச : இறந்து போன லாசருக்காக கண்ணீர் சிந்தினீரே, எங்கள் கண்ணீரையும் துடைக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாச : இறந்தோர் உயிர்பெற்றெழச் செய்தீரே, எங்கள் சகோதரருக்கு (சகோதரிக்கு) நித்திய வாழ்வளிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாச : மனந்திரும்பியக் கள்வனுக்கு நீர் வானகம் தருவதாக உறுதியளித்தீரே, எங்கள் சகோதரரையும் (சகோதரியையும்) வானகம் சேர்த்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாச : எங்கள் சகோதர (சகோதரியை) திருமுழுக்கு நீரினால் கழுவி, திருப்பூசுதலால் முத்திரையிட்டீரே, இவரை வானகம் சேர்த்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாச : எம் சகோதரருக்கு (சகோதரிக்கு) உமது திரு உடலையும் திரு இரத்தத்தையும் திருவிருந்தாக அளித்தீரே, வானகத் தூதரின் விருந்திலும் இவரை அமரச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாச : எம் சகோதரரின் (சகோதரியின்) பிரிவினால் துயருறும் நாங்கள் விசுவாசத்திலும், நிலைவாழ்வின் நம்பிக்கையினாலும் ஆறுதல் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

(கூடியிருக்கும் அனைவரும் சேர்ந்துக் கர்த்தர் கற்பித்த செபத்தைச் சொல்ல, அருள்பணியாளர் இறந்தவரின் உடல் மீது தீர்த்தம் தெளித்துத் தூபம் காட்டுகிறார்.)

குரு : செபிப்போமாக:
ஆண்டவரே, உமது திருவுளப்படி வாழ்ந்து இறந்த உம் அடியார் தம் தீய செயல்களுக்குத் தண்டனை பெறாதபடி இரக்கம் காட்டியருளும். இவரது உண்மையான விசுவாசம் இவ்வுலகில் இவருக்கு விசுவாசிகளின் கூட்டத்தில் இடம் அளித்தது போல், உமது இரக்கம் இவரை மறுவுலகில் வானதூதரின் கூட்டத்திலும் சேர்க்க வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

வாச : ஆண்டவரே, நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும்.

எல் : முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக.

(இறந்தவரின் உடலை கல்லறைக் குழியில் வைத்து, அதனை மூடும் போது கீழ்வரும் பாடலைப் பாடலாம்.)

### இறுதிப் பாடல்:

கல்லறை மேட்டினில் மனுக்குலம், கண்ணீர் சிந்தும் காட்சியினை,
கருணை கண்ணால் நோக்கினார், கவலையை கர்த்தர் போக்கினார்.

அன்று கல்லறை அருகினில் அவரும் கண்ணீர் விட்டழுதார்.
துன்புறு மனிதர் கண்ணீரைத் துடைக்க அன்றே முன்வந்தார்.

நானே உயிரும் உயிர்ப்பாவேன், நம்புவோர் இதனை இழந்திடார்,
என்றே உரைத்து இறந்தவரை எழுப்பி உண்மை அறிவித்தார்.

மூன்று நாட்கள் கல்லறையை மூடிக் கிடந்த இருளகற்றி
முன்பே உரைத்த வாக்கிக்படி மூவுலகாள்பரன் உயிர்த்து வந்தார்.

# திருப்பலி வாசகங்கள் – தொகுப்பு 1

**முதல் வாசகம்:**
**சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசகம். 3 : 1 – 9**

நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. கடும் தொல்லை எதுவும் அவர்களைத் தீண்டாது. அறிவிலிகளின் கண்களில் இறந்தவர்களைப் போல் அவர்கள் தோன்றினார்கள். நீதிமான்களின் பிரிவு பெரும் துன்பமாகக் கருதப்பட்டது. அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து சென்றது பேரழிவாகக் கருதப்பட்டது. அவர்களோ அமைதியாக இளைப்பாறுகிறார்கள். மனிதர் பார்வையில் அவர்கள் தண்டிக்கப்பட்டாலும், இறவாமையில் அவர்கள் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளார்கள். சிறிதளவு அவர்கள் கண்டித்துத் திருத்தப்பட்ட பின், பேரளவு கைம்மாறு பெறுவார்கள். கடவுள் அவர்களைச் சோதித்தறிந்த பின், அவர்களைத் தமக்குத் தகுதியுள்ளவர்கள் என்று கண்டார். பொன்னை உலையிலிட்டுப் புடமிடுவது போல் அவர் அவர்களைப் புடமிட்டார், எரிபலி போல் அவர்களை ஏற்றுக் கொண்டார். கடவுள் அவர்களைச் சந்திக்க வரும் போது அவர்கள் ஒளிவீசுவார்கள், அரிதாள் நடுவே தீப்பொறி போலப் பரந்து சுடர்விடுவார்கள், நாடுகளுக்குத் தீர்ப்பு வழங்குவார்கள், மக்கள் மீது ஆட்சி செலுத்துவார்கள். ஆண்டவரோ அவர்கள் மீது என்றென்றும் அரசாள்வார். அவரை நம்புவோர் உண்மையை அறிந்துகொள்வர். அன்பில் நம்பிக்கை கொள்வோர் அவரோடு நிலைத்திருப்பர். அருளும் இரக்கமும் அவர் தேர்ந்து கொண்டோர் மீது இருக்கும்.

ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவனுக்கு நன்றி.

**பதிலுரைப் பாடல்: திருப்பாடல் 23 : 1 – 3, 4, 5, 6 (பல்லவி: 1)**
**பல்லவி: ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.**

ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை. பசும் புல்வெளி மீது எனை அவர் இளைப்பாறச் செய்வார். அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார். அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார். தம் பெயர்க்கேற்ப எனை நீதிவழி நடத்திடுவார்.
பல்லவி: ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.

சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன். உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும்.
பல்லவி: ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.

என்னுடைய எதிரிகளின் கண் முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர். என் தலையில் நறுமணத் தைலம் பூசுகின்றீர். எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது.
பல்லவி: ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.

உண்மையாகவே, என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் எனைப் புடை சூழ்ந்து வரும். நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்.
பல்லவி: ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.

**இரண்டாம் வாசகம்:**
**திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 6 : 3 – 9**

சகோதரர் சகோதரிகளே,
திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாதா? இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். அவர் இறந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம். நாம் இனி மேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி, நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. இவ்வாறு பாவத்துக்கு உட்பட்டிருந்த நம் இயல்பு அழிந்து போகும். இது நமக்குத் தெரியும். ஏனெனில் இறந்தோர் பாவத்தினின்று விடுதலை பெற்றுவிட்டனர் அன்றோ? கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை. இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்து இனி மேல் இறக்க மாட்டார். இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கிறோம்.

ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவனுக்கு நன்றி.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (மத்தேயு 25 : 34)**
அல்லேலூயா, அல்லேலூயா! என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள். உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**
**தூய யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 5 : 24 – 29**

அக்காலத்தில்,
இயேசு யூதர்களுக்கு அளித்த மறுமொழி: ‘என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர். அவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டார்கள். ஏற்கெனவே சாவைக் கடந்து வாழ்வுக்கு வந்து விட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். காலம் வருகிறது. ஏன், வந்தேவிட்டது. அப்போது இறைமகனின் குரலை இறந்தோர் கேட்பர், அதைக் கேட்போர் வாழ்வர் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தந்தை, தாம் வாழ்வின் ஊற்றாய் இருப்பது போல மகனும் வாழ்வின் ஊற்றாய் இருக்குமாறு செய்துள்ளார். அவர் மானிட மகனாய் இருப்பதால், தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தையும் தந்தை அவருக்கு அளித்துள்ளார். இதுபற்றி நீங்கள் வியப்புற வேண்டாம். காலம் வருகிறது. அப்போது கல்லறைகளில் உள்ளோர் அனைவரும் அவரது குரலைக் கேட்டு வெளியே வருவர். நல்லன செய்தோர் வாழ்வு பெற உயிர்த்தெழுவர் தீயன செய்தோர் தண்டனைத் தீர்ப்புப் பெற உயிர்த்தெழுவர்.’

கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**********

# திருப்பலி வாசகங்கள் – தொகுப்பு 2

**முதல் வாசகம்:**
**இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம். 25 : 6 – 9**

அந்நாளில் படைகளின் ஆண்டவர் இந்த மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு விருந்தை ஏற்பாடு செய்வார். மக்களினங்கள் அனைவரின் முகத்தை மூடியுள்ள முக்காட்டை இந்த மலையில் அவர் அகற்றிவிடுவார். பிற இனத்தார் அனைவரின் துன்பத் துகிலைத் தூக்கி எறிவார். என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்து விடுவார். என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுவார். தம் மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றி விடுவார். ஏனெனில், ஆண்டவரே இதை உரைத்தார். அந்நாளில் அவர்கள் சொல்வார்கள்: 'இவரே நம் கடவுள். இவருக்கென்றே நாம் காத்திருந்தோம். இவர் நம்மை விடுவிப்பார். இவரே ஆண்டவர், இவருக்காகவே நாம் காத்திருந்தோம். இவர் தரும் மீட்பில் நாம் மகிழ்ந்து அக்களிப்போம்.'

ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவனுக்கு நன்றி.

**பதிலுரைப் பாடல்: திருப்பாடல் 130 : 1 – 2, 3 – 4, 5 – 6, 7 – 8 (பல்லவி: 1)**
**பல்லவி: ஆழ்ந்த துயரத்தில் ஆண்டவரே, உம்மை நோக்கி நான் வேண்டுகிறேன்.**

ஆண்டவரே! ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் நான் உம்மை நோக்கி மன்றாடுகிறேன்.
ஆண்டவரே! என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.
என் விண்ணப்பக் குரலை உம்முடைய செவிகள் கவனத்துடன் கேட்கட்டும்.
பல்லவி: ஆழ்ந்த துயரத்தில் ஆண்டவரே, உம்மை நோக்கி நான் வேண்டுகிறேன்.

ஆண்டவரே! நீர் எம் குற்றங்களை மனத்தில் கொண்டிருந்தால்,
யார்தான் நிலைத்து நிற்க முடியும்?
நீரோ மன்னிப்பு அளிப்பவர் மனிதரும் உமக்கு அஞ்சி நடப்பர்.
பல்லவி: ஆழ்ந்த துயரத்தில் ஆண்டவரே, உம்மை நோக்கி நான் வேண்டுகிறேன்.

ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கின்றேன். என் நெஞ்சம் காத்திருக்கின்றது. அவரது சொற்களுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றேன். விடியலுக்காய்க் காத்திருக்கும் காவலரை விட, ஆம், விடியலுக்காய்க் காத்திருக்கும் காவலரை விட, என் நெஞ்சம் என் தலைவருக்காய் ஆவலுடன் காத்திருக்கின்றது.
பல்லவி: ஆழ்ந்த துயரத்தில் ஆண்டவரே, உம்மை நோக்கி நான் வேண்டுகிறேன்.

இஸ்ரயேலே! ஆண்டவரையே நம்பியிரு.
பேரன்பு ஆண்டவரிடமே உள்ளது. மிகுதியான மீட்பு அவரிடமே உண்டு.
எல்லாத் தீவினைகளினின்றும் இஸ்ரயேலரை மீட்பவர் அவரே!
பல்லவி: ஆழ்ந்த துயரத்தில் ஆண்டவரே, உம்மை நோக்கி நான் வேண்டுகிறேன்.

**இரண்டாம் வாசகம்:**
**திருத்தூதர் பவுல் திமொத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம். 2 : 8 – 13**

அன்பிற்குரியவர்களே,
தாவீதின் மரபில் வந்த இயேசு கிறிஸ்து இறந்து உயிர்பெற்று எழுந்தார் என்பதே என் நற்செய்தி. இதனை நினைவில் கொள்ளுங்கள். இந்நற்செய்திக்காகவே நான் குற்றம் செய்தவனைப் போலச் சிறையிடப்பட்டுத் துன்புறுகிறேன். ஆனால், கடவுளின் வார்த்தையைச் சிறைப்படுத்த முடியாது. தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் மீட்பையும், அதனோடு இணைந்த என்றுமுள்ள மாட்சியையும், கிறிஸ்து இயேசு வழியாக அடையுமாறு அனைத்தையும் பொறுத்துக் கொள்கிறேன். பின்வரும் கூற்று நம்பத் தகுந்தது: 'நாம் அவரோடு இறந்தால், அவரோடு வாழ்வோம். அவரோடு நிலைத்து இருந்தால், அவரோடு ஆட்சி செய்வோம். நாம் அவரை மறுதலித்தால், அவர் நம்மை மறுதலிப்பார். நாம் நம்பத்தகாதவர் எனினும், அவர் நம்பத்தகுந்தவர். ஏனெனில் தம்மையே மறுதலிக்க அவரால் இயலாது.' இவற்றை நீ அவர்களுக்கு நினைவுறுத்து.

ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவனுக்கு நன்றி.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (2 திமொத்தேயு 25 : 11 – 12)**
அல்லேலூயா, அல்லேலூயா! நாம் அவரோடு இறந்தால், அவரோடு வாழ்வோம். அவரோடு நிலைத்திருந்தால், அவரோடு ஆட்சி செய்வோம். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**
**தூய யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 11 : 32 – 45**

அக்காலத்தில்,
இயேசு இருந்த இடத்திற்கு இலாசரின் சகோதரி மரியா வந்து, அவரைக் கண்டதும் அவர் காலில் விழுந்து, 'ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்' என்றார். மரியா அழுவதையும், அவரோடு வந்த யூதர்கள் அழுவதையும் கண்டபோது இயேசு உள்ளம் குமுறிக் கலங்கி, 'அவனை எங்கே வைத்தீர்கள்?' என்று கேட்டார். அவர்கள் அவரிடம், 'ஆண்டவரே, வந்து பாரும்' என்றார்கள். அப்போது இயேசு கண்ணீர் விட்டு அழுதார். அதைக் கண்ட யூதர்கள், 'பாருங்கள். இலாசர் மேல் இவருக்கு எத்துணை அன்பு!' என்று பேசிக் கொண்டார்கள். ஆனால் அவர்களுள் சிலர், 'பார்வையற்றவருக்குப் பார்வையளித்த இயேசு இவரைச் சாகாமல் இருக்கச் செய்ய இயலவில்லையா?' என்று கேட்டனர். இயேசு மீண்டும் உள்ளம் குமுறியவராய்க் கல்லறைக்கு அருகில் சென்றார். அது ஒரு குகை. அதை ஒரு கல் மூடியிருந்தது. 'கல்லை அகற்றி விடுங்கள்' என்றார் இயேசு. இறந்து போனவரின் சகோதரியான மார்த்தா அவரிடம், 'ஆண்டவரே, நான்கு நாள் ஆயிற்று. நாற்றம் அடிக்குமே!' என்றார். இயேசு அவரிடம், 'நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா?' என்று கேட்டார். அப்போது அவர்கள் கல்லை அகற்றினார்கள். இயேசு அண்ணாந்து பார்த்து, 'தந்தையே, நீர் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். நீர் எப்போதும் என் வேண்டுதலுக்குச் செவிசாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும். எனினும் நீரே என்னை அனுப்பினீர் என்று சூழ்ந்து நிற்கும் இக்கூட்டம் நம்பும் பொருட்டே இப்படிச் சொன்னேன்' என்று கூறினார். இவ்வாறு சொன்ன பின் இயேசு உரத்த குரலில், 'இலாசரே, வெளியே வா' என்று கூப்பிட்டார். இறந்தவர் உயிரோடு வெளியே வந்தார். அவருடைய கால்களும் கைகளும் துணியால் சுற்றப்பட்டிருந்தன. முகத்தில் துணி சுற்றப்பட்டிருந்தது. 'கட்டுகளை அவிழ்த்து அவனைப் போக விடுங்கள்' என்று இயேசு அவர்களிடம் கூறினார். மரியாவிடம் வந்திருந்த யூதர் பலர் இயேசு செய்ததைக் கண்டு அவரை நம்பினர்.

கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**********

# திருப்பலி வாசகங்கள் – தொகுப்பு 3

**முதல் வாசகம்:**
**இறைவாக்கினர் தானியேல் நூலிலிருந்து வாசகம். 12 : 1 – 3**

அக்காலத்தில் உன் இனத்தார்க்குத் தலைமைக் காவலரான மிக்கேல் எழும்புவார். மக்களினம் தோன்றியது முதல் அக்காலம் வரை இருந்திராதத் துன்பக் காலம் வரும். அக்காலத்தில் உன் இனத்தார் விடுவிக்கப்படுவர். நூலில் யார் யார் பெயர் எழுதப் பட்டுள்ளதோ, அவர்கள் அனைவரும் மீட்கப்படுவார்கள். இறந்துபோய் மண்புழுதியில் உறங்குகிற அனைவருள் பலர் விழித்தெழுவர். அவருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர். வேறு சிலரோ வெட்கத்திற்கும் முடிவில்லா இழிவுக்கும் உள்ளாவர். ஞானிகள் வானத்தின் பேரொளியைப் போலவும், பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் விண் மீன்களைப் போலவும், என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் ஒளிவீசித் திகழ்வர்.

ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவனுக்கு நன்றி.

**பதிலுரைப் பாடல்: திருப்பாடல் 103 : 8, 10, 13 – 14, 15 – 16, 17 – 18 (பல்லவி: 8)**
**பல்லவி: ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.**

ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.
நீடியப் பொறுமையும் பேரன்பும் உள்ளவர்.
அவர் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை.
நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மைத் தண்டிப்பதில்லை.
பல்லவி: ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.

தந்தை தம் பிள்ளைகள் மீது இரக்கம் காட்டுவது போல்
ஆண்டவர் தமக்கு அஞ்சுவோர் மீது இரங்குகிறார்.
அவர் நமது உருவத்தை அறிவார்.
நாம் தூசி என்பது அவர் நினைவிலுள்ளது.
பல்லவி: ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.

மனிதரின் வாழ்நாள் புல்லைப் போன்றது.
வயல்வெளிப் பூவென அவர்கள் மலர்கின்றார்கள்
அதன் மீது காற்றடித்ததும் அது இல்லாமல் போகின்றது.
அது இருந்த இடமே தெரியாமல் போகின்றது.
பல்லவி: ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.

ஆண்டவரது பேரன்போ அவருக்கு அஞ்சுவோர் மீது என்றென்றும் இருக்கும்.
அவரது நீதியோ அவர்களின் பிள்ளைகளின் பிள்ளைகள் மீதும் இருக்கும்.
அவருடைய உடன்படிக்கையைக் கடைப்பிடித்து,
அவரது கட்டளையின்படி நடப்பதில் கருத்தாய் இருப்போர்க்கு அது நிலைக்கும்.
பல்லவி: ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.

**இரண்டாம் வாசகம்:**
**திருத்தூதர் யோவான் எழுதிய திருவெளிப்பாட்டு நூல். 21 : 1 – 7**

யோவானாகிய நான் புதியதொரு விண்ணகத்தையும் புதியதொரு மண்ணகத்தையும் கண்டேன். முன்பு இருந்த விண்ணகமும் மண்ணகமும் மறைந்துவிட்டன. கடலும் இல்லாமல் போயிற்று. அப்பொழுது புதிய எருசலேம் என்னும் திருநகர் கடவுளிடமிருந்து விண்ணகத்தை விட்டு இறங்கி வரக் கண்டேன். தன் மணமகனுக்காகத் தன்னையே அணி செய்து கொண்ட மணமகளைப் போல் அது ஆயத்தமாய் இருந்தது. பின்பு விண்ணகத்திலிருந்து எழுந்த பெரும் குரல் ஒன்றைக் கேட்டேன். அது, 'இதோ! கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது. அவர் அவர்கள் நடுவே குடியிருப்பார். அவர்கள் அவருக்கு மக்களாய் இருப்பார்கள். கடவுள் தாமே அவர்களோடிருப்பார். அவரே அவர்களுடையக் கடவுளாய் இருப்பார். அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் அவர் துடைத்துவிடுவார். இனிமேல் சாவு இராது, துயரம் இராது, அழுகை இராது, துன்பம் இராது. முன்பு இருந்தவை எல்லாம் மறைந்து விட்டன' என்றது. அப்பொழுது அரியணையில் வீற்றிருந்தவர், 'இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்' என்று கூறினார். அகரமும் னகரமும் நானே. தொடக்கமும் முடிவும் நானே. தாகமாய் இருப்போருக்கு வாழ்வு அளிக்கும் நீரூற்றிலிருந்து நான் இலவசமாய்க் குடிக்கக் கொடுப்பேன். வெற்றி பெறுவோர் இவற்றை உரிமைப் பேறாகப் பெறுவர். நான் அவர்களுக்குக் கடவுளாய் இருப்பேன். அவர்கள் எனக்கு மக்களாய் இருப்பார்கள்.

ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவனுக்கு நன்றி.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (யோவான் 6 : 51 – 52)**
அல்லேலூயா, அல்லேலூயா! விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

**தூய லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 12 : 35 – 40**

அக்காலத்தில்,
இயேசு தம் சீடர்களுக்குக் கூறியது: 'உங்கள் இடையை வரிந்து கட்டிக் கொள்ளுங்கள். விளக்குகளும் எரிந்து கொண்டு இருக்கட்டும். திருமண விருந்துக்குப் போயிருந்த தம் தலைவர் திரும்பி வந்து தட்டும்போது உடனே அவருக்குக் கதவைத் திறக்கக் காத்திருக்கும் பணியாளருக்கு ஒப்பாய் இருங்கள். தலைவர் வந்து பார்க்கும் போது விழித்திருக்கும் பணியாளர்கள் பேறுபெற்றவர்கள். அவர் தம் இடையை வரிந்து கட்டிக் கொண்டு அவர்களைப் பந்தியில் அமரச் செய்து, அவர்களிடம் வந்து பணிவிடை செய்வார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தலைவர் இரவின் இரண்டாம் காவல் வேளையில் வந்தாலும், மூன்றாம் காவல் வேளையில் வந்தாலும் அவர்கள் விழிப்பாய் இருப்பதைக் காண்பாரானால் அவர்கள் பேறுபெற்றவர்கள். எந்த நேரத்தில் திருடன் வருவான் என்று வீட்டு உரிமையாளருக்குத் தெரிந்திருந்தால் அவர் தம் வீட்டில் கன்னமிட விடமாட்டார் என்பதை அறிவீர்கள். நீங்களும் ஆயத்தமாய் இருங்கள் ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்.'

கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**********

# திருப்பலி வாசகங்கள் – தொகுப்பு 4

**முதல் வாசகம்:**
**புலம்பல் நூலிலிருந்து வாசகம். 3 : 17 – 26**

அமைதியை நான் இழக்கச் செய்தீர். நலமென்பதையே நான் மறந்து விட்டேன்! 'என் வலிமையும் ஆண்டவர் மீது நான் கொண்டிருந்த நம்பிக்கையும் மறைந்து போயின!' என்று நான் சொல்லிக் கொண்டேன். என் துயரத்தையும் அலைச்சலையும், எட்டிக் காடியையும் கசப்பையும் நினைத்தருளும்! அதை நினைந்து நினைந்து என் உள்ளம் கூனிக் குறுகுகின்றது! இதை என் நினைவுக்குக் கொண்டு வருகின்றேன். எனவே நான் நம்பிக்கை கொள்கிறேன். 'ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை! அவரது இரக்கம் தீர்ந்து போகவில்லை! காலைதோறும் அவை புதுப்பிக்கப்படுகின்றன! நீர் பெரிதும் நம்பிக்கைக்குரியவர்!' 'ஆண்டவரே என் பங்கு' என்று என் மனம் சொல்கின்றது! எனவே, நான் அவரில் நம்பிக்கை கொள்கின்றேன். ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர்க்கும், அவரைத் தேடுவோர்க்கும் அவர் நல்லவர்! ஆண்டவர் அருளும் மீட்புக்காக அமைதியுடன் காத்திருப்பதே நலம்!

ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவனுக்கு நன்றி.

**பதிலுரைப் பாடல்: திருப்பாடல் 116 : 5 – 6, 10 – 11, 15 – 16 (பல்லவி: 9)**
**பல்லவி: உயிர் வாழ்வோர் நாட்டில், நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்.**

ஆண்டவர் அருளும் நீதியும் கொண்டவர்.
நம் கடவுள் இரக்கம் உள்ளவர்.
எளிய மனத்தோரை ஆண்டவர் பாதுகாக்கின்றார்.
நான் தாழ்த்தப்பட்டபோது எனக்கு மீட்பளித்தார்.
பல்லவி: உயிர் வாழ்வோர் நாட்டில், நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்.

'மிகவும் துன்புறுகிறேன்!' என்று சொன்ன போதும் நான் நம்பிக்கையோடு இருந்தேன்.
'எந்த மனிதரையும் நம்பலாகாது' என்று என் மனக்கலக்கத்தில் நான் சொன்னேன்.
பல்லவி: உயிர் வாழ்வோர் நாட்டில், நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்.

ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது.
ஆண்டவரே! நான் உண்மையாகவே உம் ஊழியன்.
நான் உம் பணியாள், உம் அடியாளின் மகன்.
என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர்.
பல்லவி: உயிர் வாழ்வோர் நாட்டில், நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்.

ஆண்டவரது பேரன்போ அவருக்கு அஞ்சுவோர் மீது என்றென்றும் இருக்கும்.
அவரது நீதியோ அவர்களின் பிள்ளைகளின் பிள்ளைகள் மீதும் இருக்கும்.
அவருடைய உடன்படிக்கையைக் கடைப்பிடித்து,
அவரது கட்டளையின்படி நடப்பதில் கருத்தாய் இருப்போர்க்கு அது நிலைக்கும்.
பல்லவி: உயிர் வாழ்வோர் நாட்டில், நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்.

**இரண்டாம் வாசகம்:**
**திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 4 : 13 – 18**

சகோதரர் சகோதரிகளே,
இறந்தோரைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல் நீங்களும் துயருறக் கூடாது. இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என நாம் நம்புகிறோம். அப்படியானால், இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார். ஆண்டவருடைய வார்த்தையின் அடிப்படையில் நாங்கள் உங்களுக்குக் கூறுவது இதுவே: ஆண்டவர் வரும் வரை உயிரோடு எஞ்சியிருக்கும் நாம், இறந்தோரை முந்திவிட மாட்டோம். கட்டளைப் பிறக்க, தலைமை வானதூதரின் குரல் ஒலிக்க, ஆண்டவர் வானினின்று இறங்கி வருவார். அப்பொழுது, கிறிஸ்து மீது நம்பிக்கை கொண்ட நிலையில் இறந்தவர்கள் முதலில் உயிர்த்தெழுவர். பின்னர் உயிரோடு எஞ்சியிருக்கும் நாம், அவர்களோடு மேகங்களில் எடுத்துக் கொண்டு போகப்பட்டு, வான்வெளியில் ஆண்டவரை எதிர்கொள்ளச் செல்வோம். இவ்வாறு எப்போதும் நாம் ஆண்டவரோடு இருப்போம். எனவே, இவ்வார்த்தைகளைச் சொல்லி ஒருவரை ஒருவர் தேற்றிக் கொள்ளுங்கள்.

ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவனுக்கு நன்றி.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (திருவெளிப்பாடு 14 : 13)**
அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர். அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள். ஏனெனில் அவர்களின் செயல்கள் அவர்களைப் பின்தொடரும். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

**தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 11 : 25 – 30**

அக்காலத்தில்,
இயேசு, ‘தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம் தந்தையே, இதுவே உமது திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். மகனும் அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறாரோ அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார்’ என்று கூறினார். மேலும் அவர், ‘பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம், என் நுகம் அழுத்தாது, என் சுமை எளிதாயுள்ளது’ என்றார்.

கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**********